1973 மார்ச் 2]

திரு. நா. வீராசாமி: இந்த அரசாங்கத்தின்மீது தவறு சொல்ல வேண்டுமென்று இதுபோன்ற பொய்யான தகவல்களைக் கூறுகின்றார்கள். கலெக்டர் இதனை விசாரித்து இந்தத் தகவல் சரியல்ல என்றவுடன், இதுபோன்ற பொய்யான தகவல் கொடுத்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முயற்சிப் பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்படிப்பட்ட தகவல் பத்திரிகையில் தான் வந்திருக்கிறது. அந்தப் பத்திரிகைகளைப்பற்றி மக்கள் புரிந்துகொண்டால் அதுவே சரியாகும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: காந்திஜி தங்கிய வீட்டின் அருகாமையில் இந்தக் கடை அமைந்திருப்பதாக இப்போது தகவல் சொல்கிறார்கள். அந்தப் பகுதியிலேயே இல்லாமல் வேறு பகுதிக்கு மாற்ற ஏற்பாடு செய்யப் படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் முன்பே சொன்னேன். அந்த வீட்டிற்கும், இந்த வீட்டிற்கும் சம்பந்தம் இல்லை. தனித்தனி வாசல், தனித் தனி கதவு. நிச்சயமாக காந்திஜி தங்கிய இடத்தில் கள்ளுக்கடை வைக்க இந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது, அனுமதிக்கவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

புலியூர்-மணப்பாறை சாலை

* 212 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா— மு.ப 9-30

(அ) புலியூர்-மணப்பாறை சாலையில் லிங்கத்தூர் அருகில் வடிகால் வாய்க்கால் செல்லுவதால் மழை காலங்களில் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக இருந்து வருவது உண்மையா?

(இ) இந்த இடத்தில் பாலம் கட்டவேண்டும் என கோரிக்கை எப்போது வந்தது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கை 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் திருச்சிராப்பள்ளி மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் முன் வந்தது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS